18th January 1964]

THE HON. SRI S. M. A. MAJID : (a) No.

(b) & (c) Do not arise.

(d) The candidates are given training as follows :—

(1) Understudy training in the blocks : About 3 months.

(2) Training at a Small Industries Service Institute. 4 months.

(3) Training at Khadi Gramodyog Vidyalaya. 8 months.

The training is intended to give the candidates theoretical as well as practical knowledge in the organisation, and working of Village and Small-Scale Industries which will enable proper discharge of their duties as Extension Officers (Industries).

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : கைத்தொழில் விஸ்தரிப்பு அதிகாரிகள் பி. டி. ஓ-வாகப் பிரமோஷன் செய்யப்படுவதில்லை என்பது உண்மையா ? அப்படி இருந்தால் அவர்களைப் பி.டி.ஓ.-வாகப் பிரமோஷன் செய்ய உத்தரவிட முடியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்தக் கேள்வி மூலக் கேள்வியில் இருந்து எழாது. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

முதல்நிலை தமிழாசிரியர்கள் (பதவி உயர்வு)

* 35 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் முதனிலைத் தமிழாசிரியர்களாகப் பணியாற்றும் அனைவரும் தலைமை ஆசிரியர் ஆவதற்குத் தகுதியுடையோராவர் என ஆணை பிறப்பிக்குமாறு கோரி மாநிலத் தமிழாசிரியர் கழகம் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட முடிவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The matter is under consideration.

புலவர் கா. கோவிந்தன் : அப்படி தலைமை ஆசிரியர்களாகப் பணி புரிகிறவர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, முதல்நிலைத் தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுவார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். பொதுவாக அப்படி உத்தரவிட்டிருந்தாலும் பானல் லிஸ்டில் கூட அவர்கள் சேர்க்கப்படுவதில்லை என்று சொல்வது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிப் புகார் ஒன்றும் வரவில்லை.